11th 12th Science Part 4 Notes Questions in Tamil

4] ஹைட்ரோ கார்பன்கள்

[Tnpsc Syllabus Portion]

1. கார்பன் மற்றுன் ஹைட்ரஜன் இணைந்த கலவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] **ஹைட்ரோ கார்பன்**

B] கரிம சேர்மம்

C] கார்பனின் கலவை

D] ஹைட்ரஜன் கலவை

குறிப்பு: ஹைட்ரோ கார்பன்கள் என்பது கார்பன் மற்றும் ஹைட்ரஜன் கலந்த கலவையாகும்.

2. ஹைட்ரோ கார்பன்கள் எத்தனை வகைப்படும்?

A] **2 வகை**

B] 3 வகை

C] 4 வகை

D] 3 வகை

குறிப்பு: ஹைட்ரோ கார்பன்கள் இரண்டு வகைப்படும். அவையாவன அலிஃபாடிக் ஹைட்ரோகார்பன்கள், அரோமேட்டிக் ஹைட்ரோ கார்பன்கள் என இரண்டு வகைப்படும்.

3. கீழே கொடுக்கப்பட்டவைகளில் ஹைட்ரோ கார்பன் எதிலிருந்து பெறப்படுகிறது?

A] பெட்ரோலியம்

B] இயற்கை வாயு

C] நிலக்கரி

D] **மேற்கூறிய அனைத்தும்**

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டவைகளிலிருந்து ஹைட்ரோ கார்பன் எளிதாக பெறப்படுகிறது.

4. கீழே கொடுக்கப்பட்டவைகளில் அலிஃபாடிக் ஹைட்ரோ கார்பன் எனப்படுவது எது/எவை?

A] **ஆல்கேன்கள்**

B] ஆல்கீன்கள்

C] ஆல்கைன்கள்

D] வளைய ஆல்கேன்கள்

குறிப்பு: மேலே குறிப்பிட்ட ஆல்கேன்கள் என்பது நிறைவுற்ற ஹைட்ரோ கார்பன்கள் ஆகும். இவை அலிஃபாடிக் ஹைட்ரோ கார்பன் என அழைக்கப்படுகிறது.

5. கீழே கொடுக்கப்பட்டவைகளில் நிறைவுறாத ஹைட்ரோ கார்பன்களை குறிக்காத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்?

A] **ஆல்கேன்கள்**

B] ஆல்கைன்கள்

C] ஆல்கீன்கள்

D] அரோமேட்டிக் ஹைட்ரோகார்பன்கள்

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டவைகளில் ஆல்கேன்களை தவிர மீதமுள்ள அனைத்தும் நிறைவுறா ஹைட்ரோ கார்பன்களை குறிக்கிறது.

6. வளைய ஆல்கேன்கள் என்று அழைக்கப்படுபவை எவை?

A] அலிஃபாட்டிக் ஹைட்ரோ கார்பன்கள்

B] அரோமேட்டிக் ஹைட்ரோ கார்பன்கள்

C] நிறைவுற்ற ஹைட்ரோ கார்பன்கள்

D] **அலிசைக்ளிக்**

7. ஆல்கேன்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A] அலிஃபாடிக் ஹைட்ரோ கார்பன்கள்

B] பாராஃபின்கள்

C] ஆல்கேன்கள்

D] **மேற்கூறிய அனைத்தும்**

குறிப்பு: மற்ற சேர்மங்களுடன் சிறிதும் வேதி ஆர்வம் காட்டாத ஹைட்ரோ கார்பன்களாகும். இவை மந்தமான வேதிப்பண்புகளை கொண்டவை.

8. பொருத்துக:

கார்பன் அணுக்களின் எண்ணிக்கை	**சேர்மத்தின் பெயர்**
1. 4	பியூட்டேன்
2. 3	புரேப்பேன்
3. 2	ஈத்தேன்
4. 1	மீத்தேன்

A] **1 2 3 4**

B] 3 4 2 1

C] 4 3 2 1

D] 2 3 4 1

9. கார்பன் அணுக்களின் எண்ணிக்கை 6 கொண்ட தனிமத்தினை தேர்ந்தெடுக்க;

A] பென்டேன்

B] பியூட்டேன்

C] மீத்தேன்

D] **கெக்சேன்**

10. தவறானதை தேர்ந்தெடுக்க:

A] கெக்சேன் - C_6H_{14}

B] பென்டேன் - C_5H_{12}

C] **பியூட்டேன் - C_2H_{10}**

D] புரேப்பேன் - C_3H_8

குறிப்பு: பியூட்டேனின் மூலக்கூறு வாய்ப்பாடு C_4H_{10} ஆகும்.

11. ஒவ்வொரு ஆல்கேனின் பெயரும் ------------ என்னும் பின்னொட்டுடன் முடிகிறது.

A] கைன்

B] கீன்

C] **ஏன்**

D] என்

குறிப்பு: ஒவ்வோரு ஆல்கேனின் பெயரும் ஏன் என்னும் பின்னொட்டுடன் முடிகிறது. அதாவது ஆல்கேன் என்று இனங்காட்டப் பயன்படுகிறது.

12. கீழே கொடுக்கப்பட்டவைகளில் தாய் ஹைட்ரோ கார்பனை கண்டறிவது எவ்வாறு?

1.எடுத்து கொண்ட சேர்மத்தில் எது அதிக நெடிய கார்பன் தொடர் அமைப்பினைக் கொண்டதோ அதுவே தாய் ஹைட்ரோ கார்பன் ஆகும்.

2.எடுத்து கொண்ட சேர்மத்தில் எது குறைந்த நெடிய கார்பன் தொடர் அமைப்பினைக் கொண்டதோ அதுவே தாய் ஹைட்ரோ கார்பன் ஆகும்.

3.ஒரே அளவுள்ள இரண்டு வேறு சங்கிலி தொடர்கள் இருந்தால் எந்த சங்கிலித் தொடரில் அதிக கிளைகள் உள்ளதோ அதுவே தாய் ஹைட்ரோகார்பன் ஆகும்.

4. ஒரே அளவுள்ள இரண்டு வேறு சங்கிலி தொடர்கள் இருந்தால் எந்த சங்கிலித் தொடரில் குறைந்த கிளைகள் உள்ளதோ அதுவே தாய் ஹைட்ரோகார்பன் ஆகும்.

A] **1 மற்றும் 3 சரி**

B] 2 மற்றும் 4 சரி

C] 1 மற்றும் 2 சரி

D] 3 மற்றும் 4 சரி

13. கீழே கொடுக்கப்பட்ட கார்பன் தொகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது.



1. 5 – மெத்தில் கெக்சேன்

2. 4 – மெத்தில் கெக்சேன்

3. 3 – மெத்தில் கெக்சேன்

4. 2- மெத்தில் கெக்சேன்

14. இரண்டு அல்லது அதற்குமேல் ஒரே பதலி இருப்பின் அவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A] டை

B] டிரை

C] டெட்ரா

D] **மேற்கூறிய அனைத்தும்**

15. ஆல்கேன்களின் முக்கிய மூலப்பொருட்களாக கருதப்படுவது எது?

A] **இயற்கை வாயு மற்றும் பெட்ரோலிய படிமங்கள்**

B] மீத்தேன் மற்றும் ஈத்தேன்

C] கார்பன் மற்றும் ஆல்கைன்

D] மீத்தேன் மற்றும் ஆல்கேன்

16. கடல்வாழ் உயிரிகள் அழிந்து சிதைந்து உண்டான பொருட்களிலிருந்து உற்பத்தியாவது எது?

A] **ஆல்கேன்கள்**

B] ஆல்கைன்

C] ஆல்கீன்கள்

D] கார்பன்

குறிப்பு: கடல்வாழ் உயிரிகள் அழிந்து சிதைந்து உண்டான பொருட்களிலிருந்து உற்பத்தி ஆல்கேன்கள் உருவாகின்றன.

17. இயற்கை வாயுவில் முக்கியமாக காணப்படும் தனிமம்?

A] **மீத்தேன்**

B] கார்பன்

C] ஆக்ஸிஜன்

D] நைட்ரஜன்

குறிப்பு: இயற்கை வாயுவில் முக்கியமாக காணப்படும் தனிமம் மீத்தேன். மேலும் ஈத்தேன், புரேப்பேன், பியூட்டேன், ஐசோபியூட்டேன் ஆகியவை காணப்படுகிறது.

18. பெட்ரோலியம் என்பது ஹைட்ரோ கார்பன்களின் -------------- ஆகும்.

A] **சிக்கலான கலவை**

B] எளிய மூலக்கூறு

C] பிரிக்கூடிய மூலக்கூறு

D] பிரிக்க இயலாத மூலக்கூறு

குறிப்பு: பெட்ரோலியம் என்பது ஹைட்ரோ கார்பன்களின் சிக்கலான கலவை ஆகும். இதிலுள்ள வெவ்வேறு பின்னங்களை பிரித்தெடுத்தல் மூலம் அநேக எளிய ஹைட்ரோ கார்பன்களை பெற முடியும்.

19. ஹைட்ரோ கார்பன்களில் எந்த அளவு வெப்பநிலையை செலுத்தும்போது, அவை சிதைவடைந்து குறைந்த கார்பன் எண்ணிக்கையுள்ள ஆல்கேன்கள் கிடைக்கின்றன.

A] **400°C – 600°C**

B] 500°C – 800°C

C] 300°C – 700°C

D] 200°C – 500°C

குறிப்பு: 400°C – 600°C வெப்பநிலையை உயர் ஹைட்ரோ கார்பன்களை செலுத்தினால் அவை சிதைவடைந்து குறைந்த கார்பன் எண்ணிக்கையுள்ள ஆல்கேன்கள் கிடைக்கின்றன. இந்நிகழ்வு பிளத்தல் எனப்படும்.

20. வாயு நிலையில் உள்ள ஆல்கீன்களை எந்த வெப்பநிலையில் சூடேற்றும் போது அவை ஒடுக்கப்படுகின்றன?

A] 400°C – 600°C

B] **200°C – 300°C**

C] 500°C – 600°C

D] 300°C – 500°C

குறிப்பு: வாயு நிலையில் ஆல்கீன்களை ஹைட்ரஜனுடன் கலந்து 200°C – 300°C வெப்பநிலைக்கு சூடேற்றப்பட்ட கெய்சல்கர் மீது நிக்கல் உலோக துகள் மீது செலுத்தி ஒடுக்க முடியும்.

21. செபேடியர் செண்டரன்ஸ் வினையில் எந்த துகள் முன்னிலையில் ஆல்கீன்கள் ஒடுக்கமடைய செய்கின்றன?

1.**நிக்கல்**

2.குரோமியம்

3.சில்வர்

4.சோடியம்

குறிப்பு: வாயு நிலையில் ஆல்கீன்களை ஹைட்ரஜனுடன் கலந்து 200°C – 300°C வெப்பநிலைக்கு சூடேற்றப்பட்ட கெய்சல்கர் மீது நிக்கல் உலோக துகள் மீது செலுத்தி ஒடுக்க முடியும். இவ்வினை செபேடியர் செண்டரன்ஸ் என அழைக்கப்படுகிறது.

22. நிறைவுறா உணவு எண்ணெய்களை எந்த வெப்பநிலையில் நிக்கல் ஊக்கி முன்னிலையில் ஹைட்ரஜனேற்றம் செய்து வனஸ்பதி நெய் பெறப்படுகிறது.

A] 200°C

B] **300°C**

C] 400°C

D] 600°C

23. ஈதரில் கரைக்கப்பட்ட ஆல்கைல் ஹாலைடு சோடியம் உலோகத்துடன் வினைபுரிந்து ஆல்கேன் உண்டாகிறது. இவ்வினைக்கு ------------ என்று பெயர்.

A] செபேடியர் வினை

B] **ஊர்ட்ஸ் வினை**

C] கிரிக்கார்டு வினை

D] பிளத்தல் வினை

குறிப்பு: ஈதரில் கரைக்கப்பட்ட ஆல்கைல் ஹாலைடு சோடியம் உலோகத்துடன் வினைபுரிந்து ஆல்கேன் உண்டாகிறது. இவ்வினைக்கு ஊர்ட்ஸ் வினை என்று பெயர்.

24. கிரிக்னார்டு கரணிகள் என்று அழைக்கப்படுபவை எவை?

A] ஆல்கீன்கள்

B] ஆல்கைல் சோடியம்

C] **ஆல்கைல் மெக்னீசியம்**

D] ஆல்கைல் பொட்டாசியம்

குறிப்பு: ஆல்கைல் மெக்னீசியம் ஹாலைடுகளே கிரிக்னார்டு கரணிகள் என அழைக்கப்படுகின்றன.

25. ஆல்கைல் ஹாலைடு என்று அழைக்கப்படுபவை எவை?

A] குளோரைடு

B] புரோமைடு

C] அயோடைடு

D] **மேற்கூறிய அனைத்தும்**

குறிப்பு: ஆல்கைல் ஹாலைடுகளான குளோரைடு, புரோமைடு, அயோடைடு ஆகியன உலர் ஈதரில் மெக்னீசிய உலோகத்துடன் வினைப்புரிந்து கிரிக்னார்டு கரணியை கொடுக்கின்றன.

26. கீழ்கண்ட சமன்பாடுகளை கவனித்து விடையளி;

$CH_3CH_2COONa + NaOH$ --» CH_3CH_3 + ?

A] $NaCO_2$

B] **Na_2CO_3**

C] NaOH

D] N_2OH

குறிப்பு: கார்பாக்சாலிக் அமிலங்களின் சோடியம் உப்புகள் சோடா சுண்ணாம்புடன் சேர்த்து சூடுப்படுத்தினால் ஆல்கேன்கள் கிடைக்கின்றன.

27. கார்பாக்ஸிக் அமிலங்களின் சோடியம் அல்லது பொட்டாசியம் உப்புகளின் செறிந்த கரைசலை மின்னாற் பகுத்தல் செய்வதால் எவை பெறப்படுகின்றன?

A] **ஆல்கேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு**

B] ஆல்கைன் மற்றும் கார்பன்

C] ஆல்கைடு மற்றும் சோடியம்

D] ஆல்கீன் மற்றும் நிக்கல்

குறிப்பு: கார்பாக்ஸிக் அமிலங்களின் சோடியம் அல்லது பொட்டாசியம் உப்புகளின் செறிந்த கரைசலை மின்னாற் பகுத்தல் செய்வதால் ஹைட்ரோ கார்பன்களின் உயர் வரிசை சேர்மங்கள் கிடைக்கின்றன. மின்னாற்பகுத்தலில் எதிர்மின் அயனிகள், நேர்மின் முனையை நோக்கி நகர்ந்து சென்று ஆல்கேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு என பிரிகையடைகிறது.

28. நெடிய அல்லது கிளை சங்கிலி அமைப்புள்ள எல்லா ஹைட்ரோ கார்பன்களுக்கும் இருமுனை திருப்புத்திறன்?

A] முடிவிலி

B] ஒன்று

C] **பூஜ்ஜியம்**

D] இல்லை

குறிப்பு: நெடிய அல்லது கிளை சங்கிலி அமைப்புள்ள எல்லா ஹைட்ரோ கார்பன்களுக்கும் இருமுனை திருப்புத்திறன் பூஜ்ஜியமாகும்.இதனால் ஆல்கேன் மூலக்கூறுகளிடையே வலிமை குறைந்த கவர்ச்சி விசையே காணப்படுகிறது.

29. ஆல்கேன் மூலக்கூறுகளுக்கிடையே செயல்படும் கவர்ச்சி விசை ---------------- என்று அழைக்கப்படுகிறது.

A] மூலக்கூறு விசை

B] **கவர்ச்சி விசை**

C] ஈர்ப்பு விசை

D] எதிர்மின் விசை

குறிப்பு: நெடிய அல்லது கிளை சங்கிலி அமைப்புள்ள எல்லா ஹைட்ரோ கார்பன்களுக்கும் இருமுனை திருப்புத்திறன் பூஜ்ஜியமாகும்.இதனால் ஆல்கேன் மூலக்கூறுகளிடையே வலிமை குறைந்த கவர்ச்சி விசையே காணப்படுகிறது. இவ்விசை வாண்டர்வால்ஸ் விசையாகும்.

30. n – ஆல்கேன்களின் நெடிய சங்கிலி அமைப்பால் புறப்பரப்பளவு அதிகரிக்க அதிகரிக்க --------------- விசை அதிகமாக இருக்கிறது.

A] மூலக்கூறு விசை

B] **கவர்ச்சி விசை(வாண்டர் வால் விசை)**

C] ஈர்ப்பு விசை

D] எதிர்மின் விசை

குறிப்பு: வாண்டர் வால் விசையானது தொடும் பரப்பு அதிகரிக்கும் போது அதிகரிக்கிறது. n– ஆல்கேன்களின் நெடிய சங்கிலி அமைப்பால் புறப்பரப்பளவு அதிகரிக்க அதிகரிக்க வாண்டர்வால் விசை அதிகரிக்கும்.

31. பொருத்துக

1.C1,C4 - அ] திடப்பொருள்

2.C9 C17 - ஆ] வாயுக்கள்

3.C18 - இ] நீர்மங்கள்

4.C4 - ஈ] வாயு

A] அ ஆ இ ஈ

B] ஆ அ இ ஈ

C] **ஆ இ அ ஈ**

D] ஈ இ அ ஆ

குறிப்பு: C1,C4 ஹைட்ரோ கார்பன் வாயுக்களாகும், C9 C17 நீர்மங்களாகவும் C18மேல் திடப்பொருளாகவும் உள்ளன.

32. சேர்மத்தில் உள்ள சங்கிலித்தொடரின் நீளம் அதிகரிக்க என்ன மாற்றம் நிகழ்கிறது?

A] கார்பன் எண்ணிக்கை

B] பாகுத்தன்மை

C] அடர்த்தி, உருகுநிலை

D] **மேற்கூறிய அனைத்தும்**

குறிப்பு: சேர்மத்திலுள்ள கார்பன் எண்ணிக்கை அதிகரிக்க கொதிநிலை, பாகுதன்மை, அடர்த்தி, உருகுநிலை போன்ற பௌதிகப் பண்புகள் மாறுப்படுகின்றன.

33. சரியான காரணத்தினை தேர்ந்தெடுக்க:

கூற்று: n-பியூட்டேனின் கொதிநிலை 2-மெத்தில் புரப்பேனின் கொதிநிலையை விட அதிகம்.

1] n-பியூட்டேனின் வாண்டர்வால்ஸ் விசை அதிகம்.

2] ஆல்கேன்களின் உருகுநிலை மூலக்கூறுகள் படிக அமைப்பில் எந்த அளவு நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதனைப் பொறுத்தது.

3] மூலக்கூறுகளின் பருமன் மற்றும் வடிவத்தை பொறுத்தது.

4] வாண்டர் வால் விசை குறைவாக உள்ளது.

A] **1 2 3 மட்டும் சரி**

B] 2 3 4 மட்டும் சரி

C] 4 3 2 மட்டும் சரி

D] 2 1 3 மட்டும் சரி

34. n – பெண்டேனின் உருகுநிலை நியோபெண்டேனின் உருகுநிலையை விடக் குறைவு?

A] **112°C**

B] 115°C

C] 116°C

D] 119°C

குறிப்பு: .n – பெண்டேனின் உருகுநிலை நியோபெண்டேனின் உருகுநிலையை விடக் குறைவு. பெண்டேனின் உருகுநிலை (-129**°C).** நியோபெண்டேனின் உருகுநிலை(-17°C)

35. நீரில் கரையும் தன்மையுடைய ஹைட்ரோ கார்பன் எது?

A] **மீத்தேன்**

B] ஈத்தேன்

C] புரப்பீலின்

D] அயோடின்

குறிப்பு: மீத்தேன் நீரில் கரையும் தன்மையுடையது. மற்ற ஹைட்ரோ கார்பன்கள் நீரில் கரைவதில்லை. மீத்தேன் அளவில் சிறியது. ஆகையால் நீரில் எளிதில் ஊடுருவி விரவுதல் மூலம் நீரில் கரைகிறது.

36. ஆல்கேன்கள் எதன் முன்னிலையில் குளோரினேற்றம், புரோமினேற்றம் செய்யப்படுகிறது?

A] ஒளி

B] வெப்பம்

C] ஊக்கி

D] **மேற்க்கூறிய அனைத்தும்**.

குறிப்பு: ஆல்கேன்கள் ஒளி, வெப்பம், ஊக்கி முன்னிலையில் குளோரினேற்றம், புரோமினேற்றம் செய்யப்படுகிறது.

37. புற ஊதா கதிர்களின் அலைநீளம்?

A] >400

B] <400

C] >500

D] >600

குறிப்பு: புற ஊதாக்கதிர்களின் அலைநீளம் < 400. புற ஊதா கதிர்கள் அல்லது உயர் வெப்பநிலையில் மீத்தேனின் நான்கு ஹைட்ரஜனின் அணுக்களையும் பதிலீடு செய்யமுடியும்.

38. குளோரோ அல்லது புரோமோபெறுதிகளை மெத்தனால் அல்லது அசிட்டோனில் கரைந்து சோடியம் அயோடைடுடன் வினைப்படுத்தி --------------- தயாரிக்கப்படுகின்றன.

A] ஆல்கைல் புரோமைடு

B] ஆல்கைல் குளோரைடு

C] **ஆல்கைல் அயோடைடு**

D] ஆல்கீன்கள்

குறிப்பு: குளோரோ அல்லது புரோமோபெறுதிகளை மெத்தனால் அல்லது அசிட்டோனில் கரைந்து சோடியம் அயோடைடுடன் வினைப்படுத்தி ஆல்கைல் அயோடைடு தயாரிக்கப்படுகின்றன.

39. $CH_2CL_2 + Cl_2 \dashrightarrow ? + HCL$

A] CCL_4

B] $\mathbf{CHCL_3}$

C] CH_2CL_2

D] Nacl

குறிப்பு: ஆல்கேன்களை புற ஊதா கதிர்கள் முன்னிலையில் குளோரினேற்றம் செய்யும் போது குளோரோபார்ம் மற்றும் ஹைட்ரோ குளோரைடின் பெறப்படுகிறது.

40. RCL + NaI --->RI + ?

A] Nacl

B] **2Nacl**

C] 3Nacl

D] 4Nacl

குறிப்பு: மெத்தனால் அல்லது அசிட்டோனில் கரையாத Nacl எளிதாக பிரித்திட இயலும். இவ்வினைக்கு ஃபிங்கெல்ஸ்டின் அல்லது கோனான்ட்- ஃபிங்கெல்ஸ்டின் வினையாகும்.

41. புளூரின் உயர்ந்த வினைதிறனுக்குக் காரணமாக இருப்பது?

A] மூலக்கூறு ஆற்றல்

B] **மூலக்கூறின் பிரிகை ஆற்றல்**

C] மூலக்கூறு பிணைப்பு ஆற்றல்

D] மூலக்கூறு பிளவு ஆற்றல்

குறிப்பு: புளூரின் மூலக்கூறின் பிரிகை ஆற்றல் (150.6kj/m) குறைவாக இருப்பதே இதன் உயர்ந்த வினைதிறனுக்கு காரணம் ஆகும்.

42. C-C ஒற்றைப்பிணைப்பை பிளக்க தேவையான ஆற்றலின் அளவு யாது? –

A] **347.3 kj/m**

B] 263 kj/m

C] 450 kj/m

D] 560 kj/m

குறிப்பு: C-C ஒற்றைப்பிணைப்பை பிளக்க தேவையான ஆற்றல் 347.3 kj/m ஆகும்.

43. கீழே கொடுக்கப்பட்ட வினையினை கவனித்து சரியான விடையினை தேர்ந்தெடுக்க:

$$CH_3CH_2CH_3 \xrightarrow[400^{\circ}C]{HNO_3} CH_3CH_2CH_2NO_2 + CH_3\underset{}{\overset{NO_2}{\overset{|}{C}}}HCH_3 + CH_3CH_2NO_2 + CH_3NO_2$$

A] **நைட்ரோ ஏற்றம்**

B] நைட்ரஜன் இணைப்பு

C] கார்பன் ஏற்றம்

D] கார்பனின் பதிலீடு

குறிப்பு: ஆல்கேன்களை நைட்ரோ ஏற்றம் செய்தால் 150-475°C ல் நிகழ்த்தப்படுகிறது. இவ்வினையில் மிகச் சிக்கலான கலவையே விளைகிறது. இவ்வினையானது தனி உறுப்பு வழியில் நடைபெறுகிறது.

44. ஆல்கேன்கள் அதிகளவு காற்றில் பற்றி எரிந்து --------------------- கொடுக்கின்றன.

A] **CO_2, H_2O**

B] CH_3, H_2O

C] CH_5, H_2O

D] CH_2, H_2O

குறிப்பு: ஆல்கேன்கள் அதிகளவு காற்றில் பற்றி எரிந்து கார்பன் டை ஆக்சைடு மற்றும் நீரினை கொடுக்கின்றன.

45. கீழே கொடுக்கப்பட்ட வினையானது எதனை குறிக்கிறது?

$$CH_4 + O_2 \xrightarrow{MoO_3} HCHO + H_2O$$

A] மாலிப்டினம் டிரை ஆக்சைடு மீத்தேனை ஃபார்மால்டிஹைடு ஆக ஏற்றம் செய்கிறது.

B] **சில்வர் ஆக்சைடு ஈத்தேனை அசிட்டிக் அமிலமாக ஏற்றம் செய்கிறது.**

C] மாலிப்டினம் டிரை ஆக்சைடு மீத்தேனை அசிட்டிக் அமிலமாக மாற்றுகிறது.

D] சில்வர் ஆக்சைடு மீத்தேனை ஃபார்மால்டிஹைடு ஆக ஏற்றம் செய்கிறது.

46. கீழே கொடுக்கப்பட்ட வினையானது எதனை குறிக்கிறது?

$$(CH_3)_3\ CH + [O] \xrightarrow{KMnO_4} (CH_3)_3\ COH$$

A] **மாலிப்டினம் டிரை ஆக்சைடு மீத்தேனை ஃபார்மால்டிஹைடு ஆக ஏற்றம் செய்கிறது.**

B] சில்வர் ஆக்சைடு ஈத்தேனை அசிட்டிக் அமிலமாக ஏற்றம் செய்கிறது.

C] மாலிப்டினம் டிரை ஆக்சைடு மீத்தேனை அசிட்டிக் அமிலமாக மாற்றுகிறது.

D] சில்வர் ஆக்சைடு மீத்தேனை ஃபார்மால்டிஹைடு ஆக ஏற்றம் செய்கிறது.

47. n- ஆல்கேன்கள் 300°C வெப்பநிலையில் , எதன் முன்னிலையில் ஹைட்ரோ கார்பன்களை கொடுக்கின்றன.

A] **அலுமினியம் குளோரைடு, ஹைட்ரஜன் குளோரைடு**

B] சோடியம் குளோரைடு, ஹைட்ரஜன் குளோரைடு

C] ஹைட்ரஜன் குளோரைடு, நிக்கல்

D] ஹைட்ரஜன் குளோரைடு, கார்பன்

குறிப்பு: .n- ஆல்கேன்கள் 300°C வெப்பநிலையில் , அலுமினியம் குளோரைடு, ஹைட்ரஜன் குளோரைடு முன்னிலையில் ஹைட்ரோ கார்பன்களை கொடுக்கின்றன.இவ்வினைக்கு ஐசோமராக்கல் என்று பெயர்.

48. கீழ்காணும் வினையானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?



A] நைட்ரோ ஏற்றம்

B] ஆக்ஸினேற்றம்

C] ஹாலஜனேற்றம்

D] **அரோமேட்டிக் சேர்ம்மாக்கல்**

குறிப்பு: ஆறு அல்லது அதற்கு மேல் கார்பன் அணுக்களைக் கொண்ட ஆல்கேன்கள் குரோமியம், வனடியம், மாலிப்டினம், ஆக்சைடோடு இணைந்து வெப்பப்படுத்தப்பட்ட அலுமினியம் மீது செலுத்தப்படும் போது ஹைட்ரஜன் நீங்கும் வளையமாக்கல் நிகழ்ந்து அரோமேட்டுக் சேர்மங்கள் உண்டாகின்றன.

49. பொருத்துக

பொதுப்பெயர்	IUPAC பெயர்
எத்தலீன்	- அ.பியூட்டின்
புரப்பிலின்	- ஆ.ஈத்தீன்

பியூட்டிலின் - இ.புரப்பீன்

A] **ஆ இ அ**

B] அ ஆ இ

C] அ இ ஆ

D] இ அ ஆ

50. பொருத்துக

மூலக்கூறு வாய்ப்பாடு பொதுப்பெயர்

1.C_2H_4 - அ.பியூட்டின்

2.C_3H_6 - ஆ.ஈத்தீன்

3.C_4H_8 - இ.புரப்பீன்

A] **ஆ இ அ**

B] அ ஆ இ

C] அ இ ஆ

D] இ அ ஆ

51. கீழே கொடுக்கப்பட்ட சமன்பாடுகளை கவனித்து சரியான பெயரினை தேர்ந்தெடுக்கவும்.



A] **2 மெத்தில் 1,3 பியூட்டாடையீன்**

B] 3 மெத்தில் 1,3 பியூட்டாடையீன்

C] 4 மெத்தில் 1,2 பியூட்டாடையீன்

D] 2 மெத்தில் 1,4 பியூட்டாடையீன்

52. கீழ்காணும் சமன்பாடுகளை கவனித்து, சரியான விடையினை தேர்ந்தெடுக்க:



A] **CH2 = CH2**

B] CH3 = CH2

C] CH2 = CH3

D] CH2 = CH4

குறிப்பு: ஆல்கஹால்கள் நீரிறக்கம் செய்யப்பட்டு ஆல்கீன்கள் பெறப்படுகின்றன. இவ்வினையில் சல்புயூரிக் அமிலம் வினைவேக மாற்றியாக செயல்படுகிறது. இவ்வினையில் H3PO4 நீரற்ற ஜிங்க் குளோரைடு மற்றும் அலுமினா வினைவேக மாற்றிகளாக பயன்படுகின்றன.

53. எஸ்டரில் காணும் ஆல்கைல் தொகுதியில் ஒரு கார்பன் அணுவிற்கு மேலிருப்பின், அவை வெப்ப சிதைவுற்று --------------- மாற்றப்படுகின்றன.

A] குளோரைடு

B] ஆல்கீன்கள்

C] **ஒலிஃபின்கள்**

D] கார்பன்

குறிப்பு: எஸ்டரில் காணும் ஆல்கைல் தொகுதியில் ஒரு கார்பன் அணுவிற்கு மேலிருப்பின், அவை வெப்ப சிதைவுற்று ஒலிஃபின்கள் பெறப்ப்டுகின்றன.

54. கீழ்கண்ட சமன்பாட்டினை கவனித்து சரியான விடையினை தேர்ந்தெடுக்க;

$$CH_3 - CH_2\,Br \xrightarrow[\text{ஹைட்ரோஹாலஜன் நீக்கம்}]{\text{ஆல்கஹால் KOH}} CH_2 = CH_2 +$$

A] **H_2O + KBr**

B] C_2O + Br

C] H_3O + KBr

D] N_2O + KBr

குறிப்பு: ஆல்கைல் ஹாலைடுகள், ஆல்கஹாலில் கரைத்த பொட்டாசியம் ஹைட்ராக்சிடுடன் சேர்க்கும் போது ஹைட்ரஜன் ஹாலைடு நீக்கம் பெற்று ஆல்கீன் பெறப்படுகிறது.

55. கீழ்கண்ட சமன்பாட்டினை கவனித்து சரியான விடையினை தேர்ந்தெடுக்க;

$$\underset{\text{அசிட்டிலீன்}}{HC \equiv CH} + 2[H] \xrightarrow[\text{கட்டுப்படுத்தப்பட்ட ஒடுக்கம்}]{Pd}$$

A] **$CH_2 = CH_2$**

B] $CH_4 = CH_2$

C] $CH_3 = CH_2$

D] $CH_5 = CH_2$

குறிப்பு: கட்டுப்படுத்தப்பட்ட ஒடுக்கத்தின் மூலம் ஆல்கைன்கள், பெலாடியம் முன்னிலையில் ஹைட்ரஜனுடன் ஒடுக்கம் பெற்று ஆல்கீன்கள் பெறப்படுகின்றன.

56. பொட்டாசியத்தின் இரட்டை காரத்துவ அமில உப்புகளின் நீர்கரைசலை மின்னாற்பகுத்தலின் மூலம் -------- பெறப்படுகிறது.

A] கார்பன்

B] நைட்ரஜன்

C] ஆக்ஸிஜன்

www.winmeen.com

D] **எத்திலீன்**

குறிப்பு: பொட்டாசியத்தின் இரட்டை காரத்துவ அமில உப்புகளின் நீர்க்கரைசலை மின்னாற்பகுத்தலின் மூலம் ஆல்கீன்கள் பெறப்படுகிறது.

57. ஒரு மூலக்கூறில் இரட்டைப் பிணைப்பின் இடமாற்றத்தால் ------------- ஏற்படுகிறது.

A] பிணைப்பு

B] **இடமாற்றியம்**

C] கலப்பு

D] பிளத்தல்

குறிப்பு: ஒரு மூலக்கூறில் இரட்டைப் பிணைப்பின் இடமாற்றத்தால் இடமாற்றியம் ஏற்படுகிறது. ஈத்தீன் புரப்பீன் இப்பண்பினை பெற்றிருக்கவில்லை. ஆனால் பியூட்டினுக்கு இப்பண்பு உண்டு.

58. கீழ்காணும் சமன்பாடுகளுக்குரிய பெயரினை தேர்ந்தெடுக்க:





A] **பியூட் – 1 – ஈன் 2 மெத்தில் புரப்பீன்**

B] பியூட் – 2 – ஈன் 2 மெத்தில் புரப்பீன்

C] பியூட் – 2 – ஈன் 3 மெத்தில் புரப்பீன்

D] பியூட் – 3 – ஈன் 2 மெத்தில் புரப்பீன்

குறிப்பு: இத்தொடர் மாற்றியமானது சங்கிலி தொடர் மாற்றியம் ஆகும். இவை சங்கிலி தொடரில் கிளைகளை உண்டாக்குகிறது.

59. மாற்றியங்கள் அவற்றிலுள்ள அணுக்கள், தொகுதிகளின் புறவேளி அமைப்பில் மாறுபடுமேயானால் அவை ------------- என்று அழைக்கப்படுகின்றன.

A] இடமாற்றியம்

B] மாற்றியங்கள்

C] **வடிவ மாற்றியங்கள்**

D] உருவ மாற்றியங்கள்

குறிப்பு: மாற்றியங்கள் அவற்றிலுள்ள அணுக்கள் தொகுதிகளின் புறவெளி அமைப்பில் மாறுபடுமேயானால் அவை புறவெளி மாற்றியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

60. வடிவ மாற்றியங்கள் எத்தனை வகைப்படும்?

A] **இரண்டு**

B] மூன்று

C] நான்கு

D] ஐந்து

குறிப்பு: வடிவ மாற்றீயங்கள் இரண்டு வகைப்படும். அவையாவன: ஒளியியல் மாற்றியம், வடிவ மாற்றியம்

61. கீழே கொடுக்கப்பட்டவைகளிருந்து ஒரு பக்க மாற்றியத்தினை தேர்ந்தெடுக்க:

1.



2.



3.



4.



A] **ஒன்று சரி**

B] இரண்டு சரி

C] மூன்று சரி

D] நான்கு சரி

62. முதன்மை வரிசையில் ஒன்றாக உள்ள இரு தொகுதிகள் அல்லது அணுக்கள் இரட்டைப்பிணைப்பின் ஒரே பக்கத்தில் இருக்குமேயானால் அந்த மாற்றியம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] E மாற்றியம்

B] M மாற்றியம்

C] **Z மாற்றியம்**

D] N மாற்றியம்

குறிப்பு: முதன்மை வரிசையில் ஒன்றாக உள்ள இரு தொகுதிகள் அல்லது அணுக்கள் இரட்டைப்பிணைப்பின் ஒரே பக்கத்தில் இருக்குமேயானால் அந்த மாற்றியம் Z மாற்றியம் என்று அழைக்கப்படுகிறது. Z என்பது ஜெர்மன் மொழியில் Zusammen என்பது ஒன்றாக கூடி இருப்பது என்று பொருள்.

63. முதன்மை வரிசையில் ஒன்றாக உள்ள இரு தொகுதிகள் அல்லது அணுக்கள் இரட்டைப்பிணைப்பின் எதிர் எதிர் பக்கத்தில் இருக்குமேயானால் அந்த மாற்றியம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] **E மாற்றியம்**

B] M மாற்றியம்

C] Z மாற்றியம்

D] N மாற்றியம்

குறிப்பு: முதன்மை வரிசையில் ஒன்றாக உள்ள இரு தொகுதிகள் அல்லது அணுக்கள் இரட்டைப்பிணைப்பின் எதிர் எதிர் பக்கத்தில் இருக்குமேயானால் அந்த மாற்றியம் E மாற்றியம் என்று குறிப்பிடப்படுகிறது. E என்பது ஜெர்மன் மொழியில் E என்டஜன் என்பது எதிர் பக்கம் என்பது பொருள்.

64. முதன்மைத்துவம் என்பது -------------- கொண்ட கார்பன் அணுவுடன் நேரடியாக பிணைக்கப்பட்ட அணுவின் அணு எண்ணைப் பொறுத்தது.

A] முப்பிணைப்பு

B] நான்முகி

C] **இரட்டை பிணைப்பு**

D] பிணைப்பற்ற

குறிப்பு: முதன்மைத்துவம் என்பது இரட்டை பிணைப்பு கொண்ட கார்பன் அணுவுடன் நேரடியாக பிணைக்கப்பட்ட அணுவின் அணு எண்ணைப் பொறுத்தது. இம்முறையில் காந் இங்கோல்டு, பிரலாக் வெளியிட்ட வரிசை விதிகள் பயன்படுத்தபடுகிறது.

65. கீழ்க்கண்ட சமன்பாட்டினை பூர்த்தி செய்க.

$$CH_2 = CH_2 + H_2 \xrightarrow[\text{அறைவெப்பநிலை}]{\text{Pt அல்லது Pd}}$$

A] **CH3 - CH3**

B] CH3 – CH2

C] CH3 – CH4

D] CH3 – CH5

குறிப்பு: 200 – 300டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் அலுமினா மீது படிந்த நிக்கல் நல்ல பயனுள்ள ஊக்கியாகும்.இவ்வினைக்கு செபேடியர் சென்டரன் ஒடுக்கம் என்று பெயர். அறைவெப்பநிலையில் வளிமண்டல அழுத்தத்தில் ரானே நிக்கல் மிகவும் பயனுள்ளது.

66. கீழ்க்கண்ட சமன்பாடுகளில் புரோமினின் நிறம் என்ன?

$$CH_3-CH=CH_2 \xrightarrow{Br_2} CH_3-\underset{|}{\overset{Br}{CH}}-\overset{Br}{CH_2}$$

1, 2–டைபுரோமோபுரப்பேன்

A] வெள்ளை

B] பச்சை

C] ஊதா

D] **நிறமற்றது**

குறிப்பு: புரோமின், குளோரின் ஆல்கீன்களுடன் எளிதாக வினையில் ஈடுப்பட்டு டை ஹாலோ ஆல்கீன்கள் கிடைக்கின்றன. மேலே குறிப்பிட்ட வினையில் புரோமின் நிறமிழக்கிறது. இத்தன்மை நிறைவுறாத்தன்மையைக் கண்டறியப் பயன்படுகிறது.

67. கீழே குறிப்பிட்ட சமன்பாடு எதனைக் குறிக்கிறது?

$$\underset{\text{எத்திலீன்}}{CH_2=CH_2} \xrightarrow{\text{உலர் } HCl} \underset{\text{எத்தில் குளோரைடு}}{CH_3CH_2Cl}$$

A] ஆக்ஸினேற்றம்

B] **ஹைட்ரோஹாலஜனேற்றம்**

C] ஹாலஜன்களுடன் கூட்டுவினை

D] ஹைட்ரஜனேற்றம்

குறிப்பு: ஒரு ஆல்கீன் ஹைட்ரஜன் ஹாலைடுகளுடன் வினை புரிந்து ஆல்கைல் ஹாலைடுகளை தருகிறது.

68. மார்காவ்னிகாவ் விதி எதை விளக்குகிறது?

A] **கூடும் மூலக்கூறிலுள்ள எதிர்மின்பகுதி, ஒலிஃபினிலுள்ள குறைந்த ஹைட்ரஜன் அணுக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள கார்பன் அணுவுடனேயே இணைகிறது.**

B] கூடும் மூலக்கூறிலுள்ள நேர்மின்பகுதி, ஒலிஃபினிலுள்ள குறைந்த ஹைட்ரஜன் அணுக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள கார்பன் அணுவுடனேயே இணைகிறது.

3. கூடும் மூலக்கூறிலுள்ள எதிர்மின்பகுதி, ஒலிஃபினிலுள்ள அதிக ஹைட்ரஜன் அணுக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள கார்பன் அணுவுடனேயே இணைகிறது.

D] கூடும் மூலக்கூறிலுள்ள எதிர்மின்பகுதி, ஒலிஃபினிலுள்ள குறைந்த ஹைட்ரஜன் அணுக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள நைட்ரஜன் அணுவுடனேயே இணைகிறது.

69. கீழ்க்கண்ட சமன்பாட்டினை பூர்த்தி செய்க

$$CH_2 = CH_2 + H_2O \xrightarrow{H^+} CH_3$$

எத்திலீன் எத்தில்

A] **CH_2OH**

B] CH_2H_2

C] CH_3CH

D] CH_5CH

குறிப்பு: எளிய ஆல்கீன்களுடன் நீர் மூலக்கூறு கூடி ஆல்கஹால்களை கொடுக்கிறது. வலிமைமிக்க அமில ஊக்கி முன்னிலையில் நீர் ஆல்கீனுடன் கூட்டு வினையில் ஈடுபடுகிறது.

70. நிலைத்தன்மை வரிசை சரியான ஒன்றினை தேர்ந்தெடுக்க:

1. **3°கார்போ கேட்டயான் > 2°கார்போ கேட்டயான் > 1°கார்போ கேட்டயான்**
2. 5°கார்போ கேட்டயான் > 4°கார்போ கேட்டயான் > 1°கார்போ கேட்டயான்
3. 4°கார்போ கேட்டயான் > 3°கார்போ கேட்டயான் > 1°கார்போ கேட்டயான்
4. 6°கார்போ கேட்டயான் > 4°கார்போ கேட்டயான் > 1°கார்போ கேட்டயான்

71. இரட்டைப் பிணைப்பைப் பிளத்தலுக்கான முக்கியமான வினைப்பொருள் --------- ஆகும்.

A] நைட்ரஜன்

B] கார்பன்

C] **ஓசோன்**

D] மீத்தேன்

குறிப்பு: இரட்டைப் பிணைப்பைப் பிளத்தலுக்கான முக்கியமான வினைப்பொருள் ஓசோனாகும்.ஆல்கீனுடன் ஓசோன் முதலில் ஓசோனைடு எனும் இடைநிலையைத் தருகிறது. இது சிங்க் / அசிட்டிக் அமிலம் எனும் ஒடுக்கும் காரணியால் கார்போனைல் சேர்மமாக ஒடுக்கமடைகிறது.

72. ஆல்கீனிலுள்ள ஒவ்வொரு கார்பனுடன் ஒரு –OH தொகுதி இணையும் இவ்வினை எதன் முன்னிலையில் நடைபெறுகிறது?

A] அமிலம் கலந்த $Kmno_4$

B] **காரம் கலந்த $Kmno_4$**

C] காரம் கலந்த நிக்கல்

D] அமிலம் கலந்த நிக்கல்

73. எளிய மூலக்கூறுகள் பல இணைந்து பாலிமர் எனும் பேரளவு மூலக்கூறை உண்டாக்குகிறது. இதற்கு --------------- என்று பெயர்.

A] **மானோமர்**

B] பனோமர்

C] கனோமர்

D] தனோமர்

குறிப்பு: மனோமர் என்று அழைக்கப்படும் எளிய மூலக்கூறுகள் பல இணைந்து பாலிமர் எனும் பேரளவு மூலக்கூறை உண்டாக்குகிறது.

74. பாலபடியாக்கல் வினை என்பது எதனைக் குறிக்கிறது?

A] **அதிக எண்ணிக்கையில் மானோமர்கள் இணைந்து ஒரே ஒரு பாலிமரை உண்டாக்கும் வினை.**

B] குறைந்த எண்ணிக்கையில் மானோமர்கள் இணைந்து ஒரே ஒரு பாலிமரை உண்டாக்கும் வினை.

3.அதிக எண்ணிக்கையில் மானோமர்கள் இணைந்து பல பாலிமரை உண்டாக்கும் வினை.

4.குறைந்த எண்ணிக்கையில் மானோமர்கள் இணைந்து பல பாலிமரை உண்டாக்கும் வினை.

குறிப்பு: அதிக எண்ணிக்கையில் மானோமர்கள் இணைந்து ஒரே ஒரு பாலிமரை உண்டாக்கும் வினையையே பாலபடியாக்கல் என்கிறோம்.

75. எத்திலீன் டை குளோரைடு தயாகால் எனும் செயற்கை இரப்பரைத் தயாரிக்கப் பயன்படுவது எது?

A] **ஆல்கீன்கள்**

B] ஆல்கைன்கள்

C] ஆல்கலிகள்

D] புரோமின்

குறிப்பு: எத்தலீன் பழங்களை பழுக்க வைக்கப் பயன்படுகிறது. தொழிற்துறையில் பயன்படும் எத்திலீன் டை குளோரைடு, கிளைக்கால் டையாக்சன் போன்ற கரைப்பான்கள் தயாரிக்கப்பயன்படுகிறது.

பாலித்தீன், பாலிப்புரப்பிலீன், PVC, பாலிஸ்டைரின், டெஃப்லான், ஆர்லான், அக்ரிலான், பாலிவினைல் அசிட்டேட், பாலி வினைல் ஆல்கஹால் போன்ற பலபடிகளை தயாரிக்கப்பயன்படுகிறது. எத்திலின் டை குளோரைடு தயாகால் எனும் செயற்கை இரப்பரை தயாரிக்கப் பயன்படுகிறது.

76. நீர்த்த பெர்மாங்க்னேட்டுகரைசலை குளிர்நிலையில் நிறமிழக்கச் செய்வது எது?

A] **ஆல்கீன்கள்**

B] ஆல்கைன்கள்

C] ஆல்கேன்கள்

D] ஆல்கலிகள்

குறிப்பு: நீர்த்த பெர்மாங்கனேட்டு கரைசலை குளிர்நிலையிலேயே நிறமிழக்கச் செய்கிறது.

77. ஆல்காடையீனின் பொதுவான வாய்ப்பாடு என்ன?

A] **C_nH_{2n-4}**

B] C_nH_{2n-1}

C] C_nH_{2n-3}

D] C_nH_{2n-5}

குறிப்பு: ஒரு ஹைட்ரோ கார்பனில் இரண்டு இரட்டை பிணைப்புகள் இருந்தால் இவை டை ஒலிஃபின் அல்லது ஆல்காடையீன் எனப்படுகிறது. மேலே கொடுக்கப்பட்ட்து இதனுடைய பொது வாய்ப்பாடு ஆகும்.

78. கீழே கொடுக்கப்பட்ட சமன்பாட்டினை கவனித்து சரியான பெயரினை தேர்ந்தெடுக்க:



A] **2,3,4- டிரை மெத்தில் பெண்டா – 1, 3 – டையீன்**

B] 2,3,5- டிரை மெத்தில் பெண்டா – 1, 3 – டையீன்

C] 2,6,4- டிரை மெத்தில் பெண்டா – 1, 3 – டையீன்

D] 2,5,4- டிரை மெத்தில் பெண்டா – 1, 3 – டையீன்

78. கார்பன்-கார்பன் முப்பிணைப்பைக் கொண்ட ஹைட்ரோ கார்பன்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] ஆல்கைன்கள்

B] அசிட்டிலின்கள்

C] முப்பிணைப்பு கார்பன் – கார்பன்

D] **மேற்கூறிய அனைத்தும்**

79. பொருத்துக

1.அசிட்டிலின்	1. 2-பியூட்டைன்
2.மெத்தில் அசிட்டிலின்	2. ஈதைன்
3.எத்தில் அசிட்டிலின்	3. 1- பியீட்டைன்
4.டை மெத்தில் அசிட்டிலின்	4. 2- பியூட்டைன்

A] **2 1 4 3**

B] 1 2 3 4

C] 1 3 4 2

D] 2 3 4 1

80. ஒரு சேர்மத்தில் அடுத்தடுத்த இரண்டு கார்பன் அணுக்கள் ஹாலஜன்களைக் கொண்டிருந்தால் அதனை ----------- என்கிறோம்.

A] பக்க ஹாலைடுகள்

B] **பக்க இரட்டை ஹாலைடுகள்**

C] பக்க முப்பிணைப்பு ஹாலைடுகள்

D] ஹாலைடுகள்

குறிப்பு: ஒரு சேர்மத்தில் அடுத்தடுத்த இரண்டு கார்பன் அணுக்கள் ஹாலஜன்களை கொண்டிருந்தால் அதனை பக்க இரட்டை ஹாலைடுகள் என்கிறோம்.

81. கீழ்கண்ட சமன்பாடுகளை கவனித்து சரியான விடையை தேர்ந்தெடுக்க;



A] $CH_3 - CH_3$

B] $CH_3 - CH_4$

C] $CH_3 - CH_4$

D] $CH_3 - CH_5$

குறிப்பு: நிக்கல், பல்லேடியம், பிளாட்டினம் போன்ற உலோகம் முன்னிலையில் ஆல்கைன்கள் ஹைட்ரஜனுடன் கூடி ஆல்கேன்கள் உண்டாகின்றன.

82. உலோகங்கள் வெட்டுவதற்கும், இணைப்பதற்கும் தேவையான ஆக்சி அசிட்டிலின் ------------- வாயு தயாரிக்க அசிட்டிலின் பயன்படுகிறது.

A] **ஊதுக்குழாய்**

B] குழாய்

C] பிளாஸ்டிக் குழாய்

D] இரும்பு குழாய்

83. வெஸ்ட்ரான் என்று அழைக்கப்படுவது எது?

A] டெட்ராகுளோரோ அசிட்டிலின்

B] டெட்ராகுளோரைடு புரோமின்

C] டெட்ராகுளோரைடு

D] டெட்ராகுளோரைடு ஆல்கீன்

குறிப்பு: டெட்ராகுளோரோ அசிட்டிலின் பெறுதி வெஸ்ட்ரான் என்று அழைக்கப்படுகிறது. இது அசிட்டிலினிருந்து தயாரிக்கப்படுகிறது. PVC, பாலிவினைல் அசிட்டேட், செயற்கை இரப்பர் ஆகியவற்றை தயாரிக்க தேவையான மூலப்பொருள் அசிட்டிலினே ஆகும்.